# சொறி, சிரங்கு

கண்ணுக்குத் தெரியாத நுண்கிருமிகளால் சொறி, சிரங்கு வருகிறது. சொறி, சிரங்கு வருவதற்கு அறிகுறியாக முதலில் அரிப்பெடுக்கும். முக்கியமாக இரவு நேரங்களில் அரிப்பு அதிகமாக இருக்கும். விரலிடுக்கில் சிறுசிறு புடைப்புகள் வரும். ஒரு இடத்தில் சொறிந்துவிட்டு இன்னொரு இடத்தைச் சொறியும்போது புடைப்புகளிலிருந்து வரும் நீரில் இருக்கும் கிருமி, நகங்களின் வழியாக உடம்பின் பல பாகங்களுக்கும் பரவும். மணிக்கட்டு, பின்கை, அக்குள், தொடை, பின்கால், இடுப்பு, சிறுவர்களின் ஆண் குறி, விரைப்பை ஆகிய பகுதிகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன.





சிறுவர்கள் சேர்ந்து விளையாடும் போது, தொற்றுக்குள்ளானவர் துணியை மற்றவர்கள் பயன் படுத்தும் போதும், இது மற்றவர்களுக்கு பரவுகிறது. சில சமயங்களில் நிணநீர் முடிச்சுகளில் வீக்கத்துடன் காய்ச்சலும் இருக்கும்.

## சொறி, சிரங்கு வந்தால் என்ன செய்ய வேண்டும் ?

>> சிறுபயறு மாவு அல்லது சீயக்காய் தூள் அல்லது சோப்புபோட்டு நன்றாக தேய்த்து குளிக்க வேண்டும்.



>> சுத்தமான துணியால் ஈரம் போக துடைத்து வேப்பிலை, மஞ்சள் அரைத்து குணமாகும் வரை பூச வேண்டும்.

>> உபயோகிக்கும் துணிகளை (படுக்கை உள்பட) வெந்நீரில் அலசி நல்ல வெயிலில் காயப்போட வேண்டும். ஒருத்தர் துணியை



இன்னொருத்தர் போடக் கூடாது.

நகத்தில் அழுக்கு சேர விடாமல் நகங்கள

வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும

மருந்து கடைகளில் கிடைக்கும் பென்சைல் பென்சாயிட்
களிம்பு பூசிவந்தால் குணம் கிடைக்கும்.





**நோய் தடுப்பு முறை**

>> தினமும் குளித்து சுத்தமாக இருப்பது. உடைகளை சுத்தமாக வைத்திருப்பது, நகங்களை அழுக்கு சேராமல் பாதுகாத்தல்.

>> பூரண குணமாகும் வரை சிகிச்சை தொடர வேண்டும்.

>> ஒரு வாரத்திற்கு பிறகு களிம்பு மருந்தை மீண்டும் உபயோகிக்க வேண்டும்.

>> ஒருவருக்கு சொறி, சிரங்கு வந்தால் குடும்பத்திலுள்ள அனைவரும் ஒரே நேரத்தில் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.


## கிராம பெண்கள் சமூக கல்வி மையம் (RUWSEC)

நேரு நகர், வல்லம் அஞ்சல், செங்கற்பட்டு - 603 002.
காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாடு,
தொலைபேசி : 04114 - 30682.